கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா. 3 நாள்: 24.08.2022

அமர்வு வழக்கு எண். 38/2009

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயபாலன் | த/பெ | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் பூம்புகார்மந்தக்கரை தெருவில் வசித்து வருகிறேன். நான் எலக்டீரிசீயனாக வேலை பார்த்து வருகிறேன். சாட்சி ராஜராஜன் என்பவரை தெரியாது. எதிரிகளை தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்ம்நதமாக எனக்கு எதுவும் தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையில் கடந்த 10.06.2007 அன்று மதியம் 12.00 மணியளவில் தர்மகுளம் கடைவீதியில் மளிகை சாமான்கள் வாங்குவதற்காக சென்றபோது அங்கு கூட்டமாக இருந்ததாகவும் அப்போது இளையமதுகூடம் கிராமத்தை சேர்ந்த அகோரம் , சோமசுந்தரம், ரமேஷ், கதிரவன் செந்தில் வீரமணி ஆகியோர்கள் பேசிக்கொண்டிருந்ததாகவும் அப்போது எங்கள் ஊருக்கு வரும் பஸ் டி.என்.49 எண்.1376 பேருந்தினை அதன் ஓட்டுனா் ராஜராஜன் ஓட்டி வந்ததாதகவும் அதில் எதிரில் அனைவரும் ஓடிபோய் பேருந்தினை மறித்து 1வது எதிரி ஓட்டுனர் சீட்டு அருகே சென்று நான் யார் என்பதை காட்டுகிறேன் கீழே இறங்குடா என்று சத்தம்போட்டு பின்னர் ராஜராஜன் கீழே இறங்கியதும் 1வது எதிரி அவரை கையால் தாக்கியும், ராஜராஜன் கன்னத்தில் அடித்து நெஞ்சில் குத்தியும், சோமசுந்தரம், ரமேஷ்,

கதிரவன் ஆகியோர்கள் டிரைவா் பக்கம் உள்ள பக்கவாட்டு கண்ணாடியை உடைத்ததாகவும், அதை நான் நேரில் பார்த்ததாகவும் போலிசரர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிாிகளுக்கு பயந்துகொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சாியல்ல.

எதிாிகள் தரப்பில் குறுக்கு விசார ணை இல்லை.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

அ.சா. 4 நாள்: 24.08.2022

அமர்வு வழக்கு எண். 38/2009

| | |
|---|---|
| பெயர் பாண்டியன் | த/பெ |
| வயது | தொழில் |
| ஜாதி | மதம் |
| கிராமம் | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் பூம்புகார்மந்தக்கரை தெருவில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தொியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகசாில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதற்கு அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையில் கடந்த 10.06.2007 அன்று காலை 9.30 மணியளவில் நானும், பூம்புகார் செந்தில் குமார் என்பவரும் தர்மகுளம் கடைவீதியில் நின்று கொண்டிருந்தபோது பூம்புகார் போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்துக் கொண்டிருந்ததாகவும் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்ததாகவும், அந்த சமயத்தில் என்னுடன் செந்தில்குமாரரும் இருந்ததாகவும் போலிசார் தயார் செய்த பார்வைமகசாில் நானும், செந்தில்குமாரும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும் சொல்லிவிட்டு எதிாிகளுக்கு பயந்துகொண்டு உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சாியல்ல.

எதிாிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.